மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,

திருவெண்ணெய்நல்லூர்.

2025-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20 ம் நாள் வியாழக்கிழமை

*******

திரு.ரெ.செந்தில்குமார், பி.எ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | ராமலிங்கம் | **அசல் வழக்கு எண்.** | - | 98/2024 |
| த/பெ. | - | குப்புசாமி | **வா.சா.** | - | 1 |
| வயது | - | | | | |
| கிராமம் | - | கண்ணாரம்பட்டு | | | |
| வட்டம் | - | உளுந்தூர்பேட்டை | | | |
| தொழில் | - | விவசாயம் | | | |

**20.11.2025.**

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வைத்தியலிங்கம் எனது உடன்பிறந்த தம்பி என்றால் சரிதான். ரேணுகாம்பாள், சகுந்தலா, அஞ்சலை என் உடன்பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். நான் எந்த அரசு, தனியார் வேலையில் இல்லை என்றாலும், வருமான வரி ரசீதுகள் எதுவும் என்னிடம் இல்லை என்றால் சரிதான்.

2. நானும்,எனது தம்பி 1ம் பிரதிவாதியான வைத்தியலிங்கமும் சேர்ந்து சுமார் 50 வருடங்களுக்கு முன்பு 50 சென்டை கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். அதில் எங்க அப்பா வாங்கிய கடனை கொடுத்து கடன் அடைத்தோம் என்றால் பணம் நான் வாங்கவில்லை, எங்க அம்மா வாங்கினார். நாங்கள் கொடுத்த கிரையப்பத்திரத்தில் யார் கையெழுத்து போட்டது, யார் பணம் வாங்கியது என்றால் பணம் அம்மா வாங்கினார்கள், நானும், தம்பியும் கிரைப்பத்திரத்தில் கையெழுத்து போட்டோம். அந்த பணத்தை வைத்து பின்னிட்டு வேறு சொத்துகளை கிரையம் பெற்றோமா என்றால் இல்லை.

3. கிரைய பணத்தை என்ன செய்தோம் என்றால் எனக்கு தெரியாது. 1973 ல் ஒரு போக்கியம் பிடித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். நான் எந்தவித

அரசாங்க வேலைக்கும் போகவில்லை என்பதால் நான் போக்கியம் பிடித்தது பொது குடும்ப சொத்தில் வந்த வருமானமான மேலே சொன்ன ஒரு சொத்தை கிரையம் கொடுத்ததின் அடிப்படையில் வந்த பணத்தை கொண்டு செய்தேன் என்றால் பணம் நான் வாங்கவில்லை. எனக்கு தனிப்பட்ட வகையில் எந்த வருமானமும் கிடையாது என்றாலும், மேற்சொன்ன கிரைய பணத்தை கொண்டு தான் போக்கியம் போட்டேன் என்றால் அந்த பணம் இல்லை, எனது மனைவியின் நகையை விற்று போக்கியம் போட்டேன். நகையை விற்று தான் போக்கியம் போட்டேன் என்ற விவரத்தை வழக்குரையிலோ, பிரமாண பத்திரத்திலோ சொல்லவில்லை என்றால் இல்லை.

4. நகையை விற்றதற்கான ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கண்ணாரம்பட்டு கிராமத்தில் சர்வே எண்.185/1 - 10 ஏக்கர் 31 செண்டில் கி-மே. 10, தெ-வ.37 அடி மனை என் பெயரில் உள்ளது என்றால் இல்லை (இந்த கேள்வியானது பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லப்படாத நிலையில் வாதி தரப்பு ஆட்சேபணையுடன் கேள்வி பதிவு செய்யப்பட்டுள்ளது).

5. சர்வே எண்.197/2 சி ல் 6 செண்ட் எனது தம்பி வைத்தியலிங்கம் பெயரில் உள்ளதா என்றால் இல்லை. என் பெயரில் எந்த சொத்து உள்ளது என்றால் எந்த சொத்தும் என் பெயரில் இல்லை, 41 செண்ட் எனக்கும், என் தம்பிக்கும் எனது அம்மா உயில் எழுதி வைத்துள்ளார். எனக்கும், என் தம்பிக்கும் எனது அம்மா உயில் எழுதி வைத்த சொத்தை எனது 3 வது மனைவி ராஜவள்ளி பெயரிலும், என் மகன்கள் ராம்குமார், ராஜ்குமார் பெயரில் சொத்தை எழுதி வைத்துள்ளேன் என்றால் இல்லை.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**(Sd/-R.Senthilkumar)**
**D.M-cum-J.M.**
**T.V.Nallur.**